RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt2224s2179

OPEN ACCESS

# இராஜம் கிருஷ்ணனின் சேற்றில் மனிதர்கள் புதினம் காட்டும் விவசாய மக்களின் வாழ்வியல் நிலை

**இரா. மீனா [அ, *]**

[அ] தமிழ் உயராய்வுத் துறை, விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி (தன்னாட்சி), எளையாம்பாளையம், திருச்செங்கோடு, நாமக்கல்-637205, தமிழ்நாடு, இந்தியா.

# Rajam Krishnan's Novel Saetril Manithan

**R. Meena [a, *]**

[a] Department of Tamil, Vivekanandha College of Arts & Sciences for Women (Autonomous), Elayampalayam, Tiruchengode, Namakkal-637205, Tamil Nadu, India

* Corresponding Author: meenagoa2016@gmail.com

Received: 20-08-2022
Revised: 03-10-2022
Accepted: 15-10-2022
Published: 15-11-2022

Check for updates

**ABSTRACT**

Human life is embedded in society, and the word society is widely spoken all over the world today. It is considered that even the rights of the individual can be taken away for the sake of social development and social welfare. This sense in a community is not a sudden development. This feeling has been emerging and growing since the day people began to think in the world. Society is currently used in colloquial terms as a group or an organization. Society is defined as a system of tradition, activity, power, mutual help, practical life, and a system of order that regulates man.

**Keywords:** Society, Novel, Saetril Manithan, Social Welfare

## முன்னுரை

புதினம் என்பது நேரிடையாக வாழ்க்கையை ஒட்டியதே ஆகும். அது வாழ்க்கையில் காணும் ஆடவர். பெண்டிர் ஆகியோரின் உறவு முறை, எண்ணங்கள், உணர்ச்சிகள் மனநிலைகள், உள்நோக்கங்கள் முதலியவற்றை விளக்கி, அவர்தம் இன்ப துன்பங்கள். போராட்டங்கள். வெற்றிகள், தோல்விகள் ஆகியவற்றையும் குறிப்பிடுகின்றன. எனவே புதின ஆசிரியருக்குப் பொருளாக அமைவது ஒன்று அல்லது பல நோக்குகளையுடைய வாழ்க்கை. வாழ்க்கையே ஒரு புதினத்தின் பொருளாக அமைவதால், அதைப் பற்றிய தன் கருத்தினை வெளிப்படையாகவோ, குறிப்பாகவோ அவரால் உணர்த்தாமல் இருக்க இயலாது.

ஒரு குறிப்பிட்ட காலத்தில், ஒரு குறிப்பிட்ட இடத்தில் அமைந்த பொருளாதார சமூகநிலைகளால் தனிமனிதன் நடத்தையில் நிகழும் மாற்றங்களைப் பற்றி அறிவிப்பனவே சமூகப் புதினங்கள் என்பார். சமூக அக்கறை கொண்ட புதினங்கள் மானிட வாழ்வாகவே விரிகின்றன. தம் கதையினைத் தனிப்பட்ட கொள்கைகளையோ அல்லது கருத்துக்களையோ விளக்கும் வகையில் அவர் கருதி எழுதுவதில்லை. வாழ்க்கையையொட்டிக் கதையமையும் போது அவருடைய சில கருத்துக்கள் மட்டும் அதன்கண் அமைந்து விடும். எனவே ஒவ்வொருபுதினமும் பொதுவாக வாழ்க்கையுண்மையை உணர்த்துவதாகும் எனலாம். வாழ்க்கையின் மூலப் பொருட்களிலிருந்து ஆசிரியர் சிலவற்றைத் தேர்ந்தெடுக்கிறார். அவற்றை அவர் ஒழுங்குபடுத்தி அமைக்கும் திறத்தில் சில உண்மைகளும் ஆற்றல்களும் புலப்படுகின்றன. அவற்றைச் சில வகைகளில் பயன்படுத்திப் பாத்திரங்களையும்

உள்நோக்கங்களையும் விளக்குகிறார். அவற்றை வைத்து கதைக்கோப்பையும் அமைக்கிறார். இவற்றிடையே ஒழுக்க நிலை பற்றிய தம் கருத்தையும் குறிப்பிடுகிறார். பொதுவாக ஒவ்வொரு புதினமும் ஒரு சிறு உலகமாகவும், அதன் ஆசிரியர் படைப்பாளராகவும், கதைக்கோப்பு தெய்வீகத் திட்டமாகவும் அமைக்கப்படுவதால்தான், புதினத்தில் மனிதனின் வாழ்க்கை உண்மைகள் வெளிப்படுகின்றன. ஒரு புதினத்திலுள்ள வாழ்க்கை உண்மையை மதிப்பிடும் போது அது உண்மையானதா, ஒழுக்கத்திற்குரிய என்பதைச் சோதித்து அறிய வேண்டும். புதினத்தில் உண்மை என்பது அறிவியல் உணர்த்தும் உண்மையைப் போன்றது அன்று. கற்பனை இலக்கியங்கள் அனைத்தும் வாழ்க்கையின் நடைமுறை செயல்களை உள்ளபடிக் கூறுவதில்லை. ஆகையால் அவையெல்லாம் பொய்யாகும் என்றும் கூறி விட முடியாது. இருப்பினும் புதின ஆசிரியர் தான் படைக்கும் புதினத்தில் மக்களின் ஆழமான வாழ்க்கையையும், வாழ்க்கைப் போராட்டத்தின் முழுமைத் தன்மையும் விளக்கி காட்டுகின்றார்.

## ராஜம் கிருஷ்ணன்

தமிழ் நாவல் உலகில் ஒரு அழுத்தமான, அழியாத இடம் அவருக்கு உண்டு. பெண்களது வாழ்வை மிக நுணுக்கமாக, சரளமான தமிழ் நடையில் சித்திரித்தவர் அவர். அவரது படைப்புகள் பரந்துபட்டவை. 'பெண் குரல்' என்ற அவரது முதல் நாவலை 'கலைமகள்' நாராயணசாமி அய்யர் பரிசுக்கு உகந்ததாகத் தேர்வு செய்து தமிழ் நாவல் உலகிற்கு ஒரு படைப் பாளியை அறிமுகம் செய்தார். அதன் பின்னர் அவரது எழுதுகோலிற்கு ஓய்வே அவர் கொடுக்க வில்லை. கடைசி ஒரு சில ஆண்டுகள் தவிர மற்ற நேரங்களில் அவர் எழுதிக்கொண்டே இருந்தவர்.

படைப்பாளிகளில் பலவகை உண்டு. கற்பனையிலேயே படைப்புகளை உருவாக்கு பவர்கள் ஒரு வகை மற்றொருவகை படைப்பிலக்கியத்திற்குத் தேவையான விவரங்களைச் சேகரித்து, படைப்பிற்குரிய சூழலில் வாழ்ந்து, பின்னர் நாவலை அல்லது சிறுகதையை எழுதுபவர்கள். இதில் ராஜம் கிருஷ்ணன் இரண்டாம் வகையைச் சேர்ந்தவர். அவர் படைத்த ஒவ்வொரு நாவலிற்கும் அவர் பல இடங்களுக்குச் சென்று விவரங்கள் சேகரித்த பின்னரே நாவல் எழுதுவதை வழக்க மாகக் கொண்டிருந்தார். இது தொடர்பாக சில நிகழ்ச்சிகளைச் சுட்டிக்காட்டலாம். 'சேற்றில் மனிதர்கள்' தஞ்சை மாவட்டத்து உழைக்கும் பெண் விவசாயக் கூலிகள் படும் அவலத்தைப் பதிவு செய்த நாவல். விவசாயிகள் ஒன்று திரண்டு நிகழ்த்திய போராட்டம் இதில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

தமிழ் நாவலில் பெண் எழுத்தாளர்களுக்கு மிக முக்கியமான பங்கு உண்டு. வை.மு.கோதை நாயகி, அநுத்தமா, லட்சுமி, சிவசங்கரி, அனுராதா ரமணன், அம்பை என்று பலரை நாம் குறிப் பிடலாம். இவர்களில் ராஜம் கிருஷ்ணன் தனித்துவம் வாய்ந்தவர். அவர் பராம்பரியத்தின் ஆக்க பூர்வமான அம்சங்களை ஏற்றுக்கொண்டு, புதுமையின் புரட்சிகரமான அம்சங்களையும் இணைத்துப் பெண் விடுதலை பேசியவர். தனக்கென ஒரு பாணியை வகுத்துக்கொண்டவர். அதிகம் படிக்காமல் வாழ்க்கையைப் புரிந்து கொண்டு தமிழ் இலக்கியத்திற்கு அணிசேர்த்தவர்.

சமுதாயத்தில் யாரும் தனித்து வாழ்ந்து விட முடியாது. தனது தேவைகளுக்காக ஒருவர் மற்றவர்களுடன் உறவாடுவது உலக இயற்கை. மனிதன் தன் தேவைகளைத் தன் உழைப்பினால் மட்டுமே பெற்றுவிட முடியாது. தான் வாழும் சமூகத்தின் உறுப்பினர்களுடைய உழைப்பையும் சார்ந்தே வாழ வேண்டிய கட்டாயத்தில் மனிதன் இருக்கிறான். அதைப் போலவே தன் பங்கிற்கு சமூக உறுப்பினர்க்காக உழைக்க வேண்டிய கடப்பாடு உடையவனாகவும் இருக்கிறான். இந்த அடிப்படையில் சமூக கடப்பாடு உடையவனாகவும் இருக்கிறான். இந்த அடிப்படையில் சமூக உறுப்பினர் அனைவரும் தங்கள் வாழ்வியல் நிலைக்காக உழைக்க வேண்டிய பொறுப்புடையவர்களாக இருக்கிறார்கள்.

## வாழ்வியல் விளக்கம்

வாழ்வு என்பது இயல்பானது. அது நம் செயல்களுக்கேற்ப நம்மை வழி நடத்துவது ஆகும். இவ்வுண்மையை தாவரம், பறவை இனம். விலங்கினம் ஆகியவற்றில் காணலாம். மனித இனம் மட்டும் வாழ்வில் இடம் கற்பனைக்கு தந்து அதைக் கொண்டு வாழ்வை அமைத்துக் கொள்கிறது. அதன்

காரணமாக துன்பங்களையும் அடைகிறது. மனிதர்கள் காணும். கேட்கும் கதைகளில் நிகழும் சாட்சிகளே இதற்கெல்லாம் காரணமாகும். எனவே அவன் காணும் திரைப்படங்களில் அவன் படிக்கின்ற கவிகை பதினம் சிறுசுகைகளிலும் சற்பனையைக் கக்கட வாழ்வியலின்காரணமாகும். எனவே அவன் காணும் திரைப்படங்களில் அவன் படிக்கின்ற கவிதை, புதினம், சிறுகதைகளிலும் கற்பனையைக் குறைத்து வாழ்வியலின் உண்மை நிலைகளை எடுத்துக்காட்டினால் இந்நிலை மாறும் மானிட சமுதாயமும் எதார்த்த வாழ்க்கைக்கு ஏற்ற கனவுகளை மட்டுமே காணும்.

பழந்தமிழ் வரலாற்றைப் பார்க்கும் போது தமிழர், தமிழ் மன்னர்கள் உழவுத்தொழிலைப் போற்றி வந்திருப்பது புலனாகும். சங்கப் புலவர்கள் ‘உழவுத்தொழிலுக்கு வரிபோடக்கூடாது’ என்று மன்னனை வேண்டியிருக்கிறர்கள். அறிவியல் சார்ந்த எந்திர மயக்கத்தில் இருக்கிற நாடுகளில் கூட விவசாயம் போற்றப்படுகிறது.

இந்துமத சமுதாயம் என்று பொதுவாக எடுத்துக் கொண்டால். நான்கு வருணப்பாகுபாடு வாழ்க்கை முறையில் வேரூன்றிவிட்டதைமறுப்பதற்கில்லை. இந்த நால்வருண அமைப்புக்கு அப்பாற் பட்டவர்களையே பஞ்சமர்-ஐந்தாவது படியில் உள்ளவர்கள் அல்லது மிகத் தாழ்ந்தவர்கள் என்றும் அடிமைகளாகக் கொள்ளப்படுபவர்கள். நான்கு வருணங்களுக்குள் வராமல், வெளிநாட்டிலிருந்து வந்த இனத்தாரைப் பஞ்சமர் என்று ஐந்தாம் வருணத்தவராக மறந்தும் குறிப்பிடுவதில்லை. ஏன்? காரணம் அவர்களுடைய வெள்ளைத்தோல், அவர்களை தகுதிக்குரியதாக நம்மை ஒப்புக் கொள்ளச் செய்திருக்கிறது.

நால்வகை வருணங்களுக்கு அப்பாலும் தாழ்த்தப்பட்டு, மேற்குலத்தோரின் அடிமைகளாய், சேற்றில் உழன்று தலையாய தொழிலுக்குரிய உழைப்பை நல்குவதற்கே பிறவி எடுத்திருப்பதாகக் கருதச் செய்வது நியாயமாக்கப்பட்டு வந்திருக்கிறது. கருமப் பயன் அல்லது முன்வினை என்ற தத்துவங்கள், இத்தகைய அடிமை ஆண்டான் நியாயங்களுக்காகவே நிலை நிறுத்தப்பட்டிருக்கின்றன என்று கொள்ளலாம்.

காட்டு விலங்குகளாய்ப் பச்சை ஊனைப் புசித்து உயிர் வாழ்ந்த மனிதன் பயிர்த் தொழிலைக் கண்டுபிடித்து, ஓரிடத்தில் நிலையாகத் தங்கி இணைந்து வாழத் தலைப்பட்ட பிறகு நிலவுடைமை என்னும் ஆதிக்க உணர்வு தொடக்க கால தாழ்ந்தோர் என்று வேற்றுமையைத் மனிதர்களிடையே உயர்ந்தோர், தோற்றுவித்தது. பின்னர் இந்த வேற்றுமையே சமுதாயத்தின் அனைத்துக் கூறுகளின் பிளவுகளுக்கும் காரணமாயிற்று.

நிலவுலகில் உழவுச் செய்து வாழக் கூடிய மக்கள் உழவர்கள் எனப்பட்டனர். சமுதாயத்தின் அடித்தட்டில் இருக்கக்கூடிய இம்மக்கள் உழவுத் தொழிலை நம்பி வாழ்க்கை நடத்துகின்றனர். அன்றாட வயிற்றுப் பிழைப்புக்கு உழைப்பை மேற்கொண்டு வாழ்பவர்கள் குடிக்க நீரும், குடியிருக்க இடமும் போன்ற அடிப்படைத் தேவைகளை நிறைவேற்ற வேண்டி வட்டிக்கு பணம் வாங்கும் ஏழை மக்கள் நெற்றி வியர்வை நிலத்தில் விழ பாடுபட்டு உழைத்தாலும் பலன் கிடைப்பதில்லை. இம்மக்களின் வாழ்க்கைப் போராட்டம் மிகுந்ததாகக் காணப்படுகிறது. பிறர் பசியைப் போக்கும் விவசாயக்குடி நிலை இச்சமூகத்தில் காணப்படுகிறது.

## உழவுத் தொழிலின் சிறப்பு

விவசாயத் தொழில் தொன்றுதொட்டு மேற்கொள்ளப்பட்டுப் பெரும்பான்மையோர் ஈடுபட்டுள்ள அடிப்படைத் தொழில் உழவுத்தொழில் மக்களின் உயிர்த் தொழிலாக விளங்குகின்றது. தொன்மை மிகுந்த தொழிலாக இலக்கியங்களில் சிறப்பாகக் காணப்படுகின்றன. அக்காலத்தில் ‘களமர்’ எனவும் ‘உழவர்’ எனவும் குறிக்கப் பெற்றனர். களமர் என்போர் உழுது உண்பவராவர். உழவர் என்போர் உழுவித்துண்போர் ஆவர்

“எருது தொழில் செய்யா தோட

விடுங்கடன் வேளார்க் கின்று” (Parimanam & Balasubramaniyan, 2004)

எனவும்,

"அக வயல் இளநெல் அரிகால் சூடு" (Parimanam & Balasubramaniyan, 2004)

எனவும் பரிபாடல் வரிகள், வேளாண் தொழிலைக் கொண்டிருந்த களமர் எருதினைக் கொண்டு அத்தொழிலைச் செய்தமையும், நெல்வரிகளைச் சுமைக்கட்டுகளாக கட்டிக் களத்தில் போராக அடுக்கி வைத்து நெல் அடித்த முறையையும் விளங்குகின்றது. உழவுத் தொழில் செய்து வாழ்பவனே தலைசிறந்தவன். உழைப்பை மட்டும் நம்பி உயிர்வாழும் உழவன் உன்னதமானவன் என்பதை திருவள்ளுவர்,

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வர் மற்றெல்லாம்

தொழுதுண்டு பின் செல்பவர்" (Munisamy, 1992)

என்று குறிப்பிடுகிறார். சேற்றில் மனிதர்கள் என்ற புதினத்தில் ராஜம்கிருஷ்ணன் உழவுத் தொழிலின் சிறப்பை எடுத்துரைக்கிறார். இதனை.

"உழவுத்தொழில் ஜீவாதாரமான தொழில். சேத்தில் காலவச்சாத்தா சோத்தில கைய வைக்கலாம். சோத்தில கைய வைக்காம மனுசன் உயிர் வாழ முடியுமா? சொவர வச்சித்தா சித்திரம் அறிவு, படிப்பு, பட்டம், பதவி, ராச்சியம் எல்லாத்துக்கும் அடிப்படை இது. அடிப்படை தொழில் இது. சேத்தில இருக்குன்னு குழிதோண்டிப் புதைக்காம மேலே ஏத்தி வைக்கணும். இதுமேல, மத்ததெல்லாம் கீள. இது தாம் புரட்சி, விவசாயம் முதத்தொழில். இதச் செய்யிறவனுக்கு அந்தசு, கவுரவம் வேணும் அத்தக் கொண்டு வருவது புரட்சி. இப்ப உழைக்காதவன் மேல்வேணும் அத்தக் கொண்டு வருவது புரட்சி இப்ப உழைக்காதவன் மேல் உழைப்பவன் கீள. இது மாறிய புரட்சி" என்கிறார் (Rajam Krishnan, 1982).

## அடிமை வாழ்வு

மக்கள் உயிர் வாழ்வதற்கு இன்றியமையாத உணவைப் பயிராக்கும் உழவனின் நிலை உணவுக்கும், நீருக்கும் தட்டுப்பாட்டுடன் வாழ்க்கையே பிரச்சினைகளாகவும், போராட்டமாகவும் தொடர்கின்றது. இத்தகைய சூழலுக்குரியக் காரணம் எளிதில் புலனாகக் கூடிய ஒன்றே. உழவர்கள் உழைப்பாற்றலுக்கு மதிப்பு இன்றி. ஊருக்கு வளம் பெருக்கினாலும் தமக்கு போதுமான உணவு கூட இன்றி வாடுகின்றனர். அடித்தள மக்கள் புரட்சி, குமுறல், சுரண்டல், வர்க்கப் பார்வை போன்ற பொதுவுடைமைச் சொற்களில் மனம் மயங்குவதைக் காண முடிகின்றது.

பொருளாதாரே வேறுபாடே இம்மக்களின் குறை நீங்காமைக்குக் காரணம். உலகில் மக்கள் உயிர் வாழ்வதற்கு இன்றியமையாத அடிப்படைத் தொழில்களில் ஈடுபட்டுள்ளவர்கள் பெரும்பாலும் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்தவராகவே உள்ளனர். தம் உழைப்பால் பிறரை வாழ வைக்கும் இம்மக்கள் பிறப்பால் ஒதுக்கப்பட்டு எதையும் காண முடியாதவராய் அடிமைச் சேற்றில் உழன்று கொண்டுள்ளனர். வறுமையும், சுரண்டலும் இவர்களை வருத்திக் கொண்டுள்ளன.

தாழ்த்தப்பட்ட மக்கள் முன்னேற வேண்டும் என்று சொன்னால் பண்டைய நாள் பதை பதைப்பு இல்லாவிடினும் அவர்கள் முன்னேற வேண்டும் என்பதற்கு எதிரான உயர் சாதியினரின் மனப்பான்மை முற்றிலும் மாறிடவில்லை. இத்தகு வளையாத மனப்போக்கின் காரணமாகச் சமய விழாக்களைக் இம்மக்களின் முன்னேற்றத்திற்கு எதிராக கூட அவர்கட்கு இடர்கள் விளைவிக்கும் நோக்குடன் பயன்படுத்துகின்றனர். இதனை ஆண்டான் அடிமை நிலையை வலியுறுத்தும் இந்து சமய அடிப்படையில் சாமி கும்பிடுவது கூட அரசியல், உயர் சாதியினரின் ஆதிக்கத்தைக் காட்டுவதாக உள்ளது. சாதி அமைப்பு சமூக முன்னேற்றத்தைத் தடுக்கும் தன்மை வாய்ந்தது.

விவசாயிகள் வயலில் வேலை செய்யும் சமயத்தில் ஒரு சிறு தவறு செய்தாலும் கட்டி வைத்து அடிப்பார்கள். மிராசு உட்கார்ந்து மேற்பார்வை பார்ப்பார். மிராசு ஆணையிட காரியக்காரன் சாட்டையில் அடிப்பான். இது பெரும்பாலும் அறுவடையின் போது நிகழும். அதோடுமல்லாமல் பெண்களுக்கும் இந்நிலை தான். நடவு நேரத்தில் கொஞ்சம் நிமிர்ந்து வெற்றிலை போடக்கூடாது. அவ்வாறு செய்தால்

மாட்டை அடிப்பது போல் பெண்னென்றும் பாராமல் காரியக்காரன் அடிக்கும் நிலை காணப்படுகிறது. பாடுபட்டு உழைத்தாலும் பலன் கிடைப்பதில்லை. பலன் கிடைக்காவிட்டாலும் அடிவாங்கும் அடிமைநிலையை ராஜம்கிருஷ்ணன் 'சேற்றில் மனிதர்கள்' புதினத்தில் சுட்டிக்காட்டுகிறார். இதனை,

"பொண்டுவ, நடவு நட்டிட்டே பின்னாடி போவணும். கொஞ்சம் நிமிர்ந்து வெத்திலே போட முடியாது. காரியக்காரன் சீலயத்தூக்கிக்கச் சொல்லி வெத்துக்காலிய அடிப்பான்... நாங்க உழவுவோட்டுறப்ப, வெத்துல போட முடியாது. நா என்ன செய்யிவேன்? நாலு முடிப்பா வெத்தில பொயிலயக்கட்டி மாட்டுக் கழுத்தில செருவிருப்ப. அங்க இங்க அவம்பாத்திருக்கிற சமயம் குறிப்பிடுகிறார். பார்த்து எடுத்துப் போட்டுப்பேன்" என்ற வரிகளால் அறியலாம் (Rajam Krishnan, 1982).

## இறை நம்பிக்கை

தொன்மைக்கால மனிதன் இயற்கையோடு இரண்டறக் கலந்து வாழ்ந்ததால் அவனது ஆற்றலுக்கு இயற்கை பணிந்த போது பெருமிதம் கொண்டான். இயற்கையின் ஆற்றல் இவனை வென்ற போது அச்சம் கொண்டான். இயற்கையின் வலிமை இவனது அறிவுக்குப் புலப்படாத நிலையில் வியந்து நின்றான். இவனையும் மீறி இவனது ஆற்றல் வலிமை இழந்தபோது, இயற்கையின் அதிவல்லமையைக் கண்டதால் உருவான அச்சம், அதனை வழிபடச்செய்தது. மனிதன் தன்னை, இயற்கையின் அழிவுப் பாதையிலிருந்து காத்துக் கொள்ளவே இயற்கையை வழிபடத் துணிந்தான். பழந்தமிழகத்தில் இயற்கை வழிபாடும். இறைவழிபாடும் கலந்தே

பழந்தமிழ் மக்கள் இயற்கையான ஞாயிறு திங்கள், தீச்சுடர் ஆகிய மூன்றினையும் வழிப்பட்டனர் என்பதை

"கொடிநிலை கந்தழி வள்ளி என்ற

வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றும்

கடவுள் வாழ்த்தொரு கண்ணிய வருமே" (Ilampuranar, 2005)

என்று தொல்காப்பியம் இயம்புகிறது. இயற்கை வழிபாடே உருவுடைய இறைவழிபாட்டிற்கு அடிப்படையில் அமைந்தது தெய்வங்கள் கல் வடிவில் உருவம் பெற்று வழிபடுவதற்கு நடுக்கல் வணக்கம் வழி அமைத்தது எனலாம் நடுகல் வழிபாட்டிலிருந்து உருவ வழிபாட்டை மக்களினம் மேற்கொண்ட போது சிறு தெய்வங்கள். பெருந்தெய்வங்கள் என்ற இரு நிலைகளில் தெய்வ வழிபாடு அமையப்பெற்றது. குறிப்பிட்ட இடங்களில் வாழ்வோர் அவர்களுக்குரிய தெய்வங்களை ஊர்த்தெய்வங்களாக உருவாக்கி வழிப்பட்டனர். பண்டைத் தமிழ்மக்கள் சிறு தெய்வங்களை வழிபட்டனர் என்பதை

"கள்ளி நீழற் கடவுள் வாழ்த்தி"

"தொன்றுஉறை கடவுள் சேர்ந்த பராரை

மன்றப் பெண்ணை"

என்ற வரிகளால் தெளிவாகிறது. இறைவனிடத்து எந்த சந்தேகமும் இன்றி, முழு நம்பிக்கையுடன் சரண் அடைபவர்க்கு நன்மையே ஏற்படும் என்பது மக்கள் நம்பிக்கை மட்டுமல்ல. அது ஆன்றோர்களின் வாக்காகும். ஒரு செயலைச் செய்யத் துவங்கும் முன்பு கடவுளை வழிபட்டுச் செய்தால், அச்செயல் நன்மையாக முடியுமென்பது நம்பிக்கை. இதை மக்கள் இன்றளவும் தொடர்ந்த மேற்கொள்கின்றனர்.

சேற்றில் மனிதர்கள் புதினத்தில் பத்து வருடமாக அம்மனை விவசாயக் குடிமக்கள், வழிபடாமல் இருந்துள்ளனர். முறையாக அம்மனுக்கு திருவிழா எடுத்தால்தான் அம்மன் மனம் குளிர்வாள். நன்மையே நடக்கும் என்பதை, "அதெல்லாம் சரியாப்பூடும். இதெல்லாம் ஒரு நேரம் பத்தாத கோளாறு தான். பத்து வருசமா அம்மனுக்கு ஒண்ணும் செய்யாம போட்டுட்டம் இப்ப விட்டிடக்கூடாது. போன வருசம் பாரு, மழவந்து குறுவபூரா பாழாப் போச்சி, கோடயில மாடு கன்னெல்லாம் சீக்கு வந்து அதும்

கோளாறாப் போச்சி இதுக்கெல்லாம் என்ன காரணம்? நாம இன்னிக்கு ஊருல ஒரு மதிப்பா தலையெடுத்த பிறகு நாமதா முன்ன நின்னு நடத்தணும் வக்கீலையரு சம்சாரம் வந்து 'அப்பவே எல்லாம் செய்யிங்க வீட்டு இரும்புப் பொட்டில நவ நட்டெல்லாம் இப்பவும் பூதம் காக்குற மாதிரி எதுக்கு வச்சிருக்கிறது. சாமிக்கின்னு இருக்கிறத சாமிக்குச் செய்யனும்னு சொன்னாங்க அந்தக் காலத்தில் ஊரில் எல்லாம் சேந்து அம்மனுக்குன்னு ஒதுக்கி வச்ச சொத்து. அதனால், விழா எடுக்கிறதுன்னு தீர்மானமாயிட்டது" என்ற விவசாய மக்கள் கூற்றிலிருந்து அறியலாம்(Rajam Krishnan, 1982).

## முடிவுரை

சமூகத்தில் மக்களின் வாழ்வியல் நிலை குறித்து புதினங்களின் வாயிலாக ராஜம் கிருஷ்ணன் எடுத்தியம்புகிறார். உலகில் தம் முதன்மையானத் தொழில் விவசாயம். விவசாயம் செய்து தங்கள் வாழ்வை நடத்தும் உழவர் மக்களின் பொருளாதாரம் பின்தங்கியே காணப்படுகிறது. உலகைக் காக்கும் உழவர், தன்னைக் காத்துக் கொள்ள முடியாத துன்பநிலைகளையும், முதலாளித்துவ ஆதிக்கத்தால் அவர்கள் அடையும் இன்னல்களையும் ராஜம்கிருஷ்ணன் விளக்குகிறார். கடலையே நம்பி வாழ்க்கை நடத்தும் மீனவர்களின் வாழ்க்கைப் போராட்டமும், கடினமாக உழைத்தும் பொருளாதார மேம்பாடு அடைய முடியாத அவலநிலையையும் இவ்வியலில் குறிப்பிடுகிறார். இயற்கையோடு இயைந்து வாழும் மலைவாழ் மக்களின் இனிமையான வாழ்க்கை முறையைக் கூறுவதோடு இயற்கையை ஒருபோதும் செயற்கையால் வெல்ல முடியாது என்பதையும் வெளிப்படுத்துகிற். குடும்பத்திலும் சமூகத்திலும் பெண்களின் வாழ்வியல் நிலை பற்றியும், அவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய உரிமைகள் குறித்தும் இவ்வியலில் ராஜம் கிருஷ்ணன் குறிப்பிடுகிறார்.

## References

Ilampuranar, (2005) Tholkappiyam- Ilampuranar Urai, First Edition, Saradha pathippagam, Chennai, Tamil Nadu, India

Munisamy, V. (1992) Thirukkural Thelivurai, Thirukkuralar Pathippagam, Chennai, India

Parimanam, A.M., Balasubramanian, K.V. (2004a) Paripadal, New Century Book House, Chennai, India

Rajam Krishnan, (1982) Setril Manitharkal, Dhagam, Chennai, India

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License